மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது எதுவுமே அரசுக்குத் தெரியாது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து உரிய பதிலை அளிக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், இந்தக் கேள்வி கேட்கப் பட்டு 6 மாதங்கள் ஆகியும் பதில் வரவில்லையென்ற வகையிலே சொன்னார்கள். இதற்கு இவ்வளவு நாள் காலம் எடுத்துக் கொள்வதற்கு கேள்விகளுக்கு இருக்கிற விதிமுறைகளின்படி இது சரிதானா? இதில் சம்பந்தப்பட்டிருக்கிற அதிகாரிகள் மீதும், கீழே இருக்கிற ஊழியர்கள்மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தின் பேரில் தான் இந்த அரசாங்கம் உடனடியாக விளக்கம் கேட்டு உரிய நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பின் தங்கிய வகுப்பில் எந்த எந்தச் சமூகங்களைச் சேர்ப்பிப்பது என்பதைப் பற்றிய சர்ச்சை இங்கே எழுந்தது. நீலகிரி மாவட்டத்திலே வாழ்கிற படகர் என்று குறிப்பிடுகிற அந்தச் சமுதாயத்தை, பின்தங்கிய வகுப்பில் (திரு. மு. கருணாநிதி : மிகப் பின்தங்கிய வகுப்பில்), மிகப் பின்தங்கிய வகுப்பில்— Most Backward Class சேர்க்கிற உத்தேசம் உண்டா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அதை நிச்சயம் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Encroachments in Highway at Palani

*563 Thiru S. M. VASAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :—

(a) whether the persons occupying the places belonging to the Highways Department in Palani area have been evicted ; and

(b) the number of persons yet to be evicted ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) அங்கீகாரம் பெறப்படாத 111 ஆக்கிரமிப்புளில் 37 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

(ஆ) எண்ணிக்கை 74 ஆகும்.

திரு. சீ.மு. வாசன் : மீதமுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற இந்த அரசு ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, நெடுஞ்சாலை ஆக்கிரமிப்பிலிருந்து அப்புறப்படுத்தப் பட்டவர்களில் பாதிக்கப்பட்ட குடிசைவாசிகளுக்கு மாற்று இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி ஒதுக்கப்பட்டிருந்தால், எவ்வளவு? ஒதுக்கப்படாமல் இருந்தால், ஒதுக்க ஏதாவது நடவடிக்கை அரசின் முன்னால் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைவாழ் மக்கள் மிகுதியாக ஆக்கிரமிப்பு செய்ச வில்லை. பெட்டிக் கடை வைத்திருப்பவர்களும், மற்ற வியய பாரம் நடத்துபவர்களும் வீடுகளைக் கட்டிக் கொண்டிருப்பவா களும்தான் அதிக ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். குடிசை வாழ் மக்கள் சில பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்ததற்கு மாற்றி இடம் தருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் வேறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சிங்காநல்லூரில் மேம்பாலம்.

*564 வின—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் நகரத்தில், ஒண்டிப்புதூரில், திருச்சி செல்லும் நெடுஞ்சாலையின் குறுக்கே ரயில்வே மேம்பாலம் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை மேற்கொள்ளப் படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.